# COVID-19 மற்றும் 'ஃப்ளூ' காரணமாகத் தீவிர நோய்வாய்ப்படுவதற்கான அதியுயர் ஆபத்து உங்களுக்கு இருந்தால், அதற்காக முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

## COVID-19 மற்றும் 'ஃப்ளூ' காரணமாக தீவிர நோய்வாய்ப்படுவதற்கான அதியுயர் ஆபத்து உங்களுக்கு இருக்கிறதா?

### பின் வருவன இதில் உள்ளடங்கும்:

- 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதானவர்கள்
- கர்ப்பிணிப் பெண்கள்
- ஆபொரிஜினிப் பூர்வகுடிகள், 'டோரிஸ் நீரிணை'த் தீவகத்தவர்கள் மற்றும் 'பஸிஃபிக்' தீவு மக்கள்
- உடற்பருமன், சர்க்கரை நோய், பாரதூரமான இருதய நோய், தீராத நுரையீரல் நோய் (கடந்த 12 மாதங்களில் மருத்துவமனை சிகிச்சைக்குத் தேவை ஏற்படுத்திய கடும் ஆஸ்துமா உள்ளடங்க), தீராத கடும் ஈரல் அல்லது சிறுநீரக நோய், வினையமான புற்றுநோய், அல்லது பலவீனமுற்ற நோயெதிர்ப்புத்-திறன் ஆகியன உள்ளவர்கள்
- இயலாமையுடைய சிலர் - இவர்களில் நுரையீரல்கள், இதயம் அல்லது நோயெதிர்ப்பு முறைமையைப் பாதிக்கும் இயலாமையுள்ளவர்களும் உள்ளடங்குவர்
- முதியோர் பராமரிப்பு மற்றும் இயலாமையுடையோர் பராமரிப்பு இல்லங்களில் வசிப்பவர்கள்
- தடுப்பூசியிட்டுக்கொள்ளாத 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்.

நீங்கள் நோய்வாய்ப்பட்டால், நீங்கள் குணமடைய உதவுவதற்காக உங்களுடைய மருத்துவர் வைரஸ்-எதிர்ப்பு மருந்து ஒன்றை ஒன்றை சிபாரிசு செய்யக்கூடும்.

நோய்வாய்ப்பட்ட பிறகு கூடிய விரைவில் நீங்கள் இந்த மருந்தினை எடுக்க வேண்டியிருக்கும்.

முன் கூட்டியே திட்டமிடுங்கள், மற்றும் வைரஸ்-எதிர்ப்பு மருந்துகள் உங்களுக்குத் தகுமா என்பதைப் பற்றி உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள்.

உடல் நலம் குறித்த கரிசனக்-கவலைகள் ஏதும் உங்களுக்கிருந்தால், **131 450**-இல் TIS -ஐ அழைத்து NSW Health Flu மற்றும் COVID-19 Care சேவையினருடன் **1800 960 933** -இல் Home Support Line மூலமாகப் பேசவேண்டும் என்று கேளுங்கள்.

**மேலதிகத் தகவல்களுக்கு ww.nsw.gov.au எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.**



© NSW Health May 2022.